326 The Registrar of Books,
Madras 6.

பதிவு எண்—M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

கல்விக்கொடி

1-NOV 951 MADRAS

கிழமை வெளியீடு :- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—3 | துருதுலம், மாம்பாக்கம் ; கர, ஆவணி ; 7—9—51. | தளிர்—47

"குணநலம் சான்றோர் நலனே ; பிறநலம்
எந்நலத் துள்ளதூஉ மன்று"

"கடனென்ப நல்லவை யெல்லாம் ; கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு."

மோனத் தேனிப்பு

(Silent Meditation)

நீ, மௌனமாகவும் கலக்கமின்றியும் புலன்கள் யாவும் ஓய்வு பெற்றடங்க, தெய்வ வுணர்ச்சி நிறைந்த உள்ளத்தோடு அமர்ந்திருக்கும்போது, நீ உடல் தொடர்பான ஆசைகளாற் பிணிப்புண்ட ஒருவனல்லன் என்ற உணர்ச்சி நினக்கு உண்டாகின்றது. அதற்குப் பதில், தூய்மையும் விளக்கமும் பெற்ற நின் உள்ளம், நின்னைக் கடவுளுடன் ஒன்றுபடச் செய்யும் அருளொளி நிரம்பப் பெறுகின்றது. பின்னர், நின்னைச் சுற்றிலும் உலகில் சூழ்ந்துள்ள முரண்பட்ட செயல்களும் பல வகையான குழப்பங்களின் வேகங்களும் நினக்கு ஒரு பொருளாகத் தோன்று. நீ, விண்ணிற் சஞ்சரிப்பது போன்ற ஓர் உணர்ச்சி அடைகின்றாய். ஆண்டவனோடு தொடர்புற்று, அவனை நன்கு உணரக் கூடிய தெளிந்த ஞானமடைகின்றாய். நின் ஆன்மா ஓர் இன்னிசைக் கீதமாகிறது. அதன் இனிய இயக்க அலைகள் எங்கும் பரவி ஒவ்வொரு பொருளுக்கும் எழுச்சியும் தூய்மையும் இயக்கமும் ஊட்டுகின்றது. நீ மரணத்தின் எல்லைக் கோட்டினைக் கடந்து, அமரத்துவப் பேரசை யடைகின்றாய். ஆகவே, எண்ண வியலாத காலமாக நின்னுடைய உண்மையான பிறப்புரிமையாய் இருந்து வரும் ஒரு நிலைமையைப் பெற்று வெற்றியுறுகின்றாய்.

'The Vision' of August 51.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 4. தனித் தாள்—அணா 1

சிலப்பதிகாரச் - - செல்வியர்

(நிலவு)

எனக்கு ஆருயிர்த் தோழி ஒருத்தி உண்டு. அவள் பெயர் சாரதா. மிகவும் தமிழில் அன்பு உடையவள். அதிக பழக்கத்தினால் நாங்கள் சகோதரிகளை விட அதிக அன்பாக இருந்தோம். கால மாறுதலால் பிரிக்கப்பட்டு அவரவர் சொந்த ஊர்களுக்குப் போக நேர்ந்தது. பிரிந்த போதும் எங்கள் நட்பு மாற வில்லை. "மலர்ந்த தாமரை போல்" இன்றளவும் எங்கள் நட்பு நீடித்து வருகிறது. எம் முயிர் நீக்குமளவும் எங்கள் நட்பு நீடித்திருக்க ஆண்டவர் அருளும் ஆசிரியர் வாழ்த்தும் வேண்டுமென்று வேண்டுகின்றோம்.

நாங்கள் பிரிந்திருக்கின்றமையால் ஒருவருக்கொருவர் கடிதம் எழுதிக் கொள்வது வழக்கம். அவள் எழுதும் கருத்துக்கள் எனக்கு ஊக்கம் அளிக்கக் கூடியவாக இருக்கும். எனக்கு மட்டுமன்றி, பொதுவாக எல்லோருக்கும் பயனளிக்கக் கூடியதாக எதாவது அவள் எழுதுவாள். அப்படி சிலப்பதிகாரத்தைப்பற்றி ஒரு முறை எழுதி யிருந்தாள். சிலப்பதிகாரத்தின் மிகச் சிறந்த மாதர்களாகிய கண்ணகி, மாதவி, மணிமேகலை என்பவர்களைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தாள். கற்புச் செல்வி கண்ணகி, அன்புச் செல்வி மாதவி, அறச் செல்வி மணிமேகலை. இவர்களில் உனக்கு விருப்பமானவர் யார்? என்று கேட்டிருந்தாள். விடையை இதன் வாயிலாகத் தெரிவிக்கிறேன்.

கண்ணகி கற்புச் செல்வி என்பது மிகப் பொருந்தும். வீரமும் உறுதியும் ஊக்கமும் உடையவள். இவ்வளவு வீரம் இல்லையெனில், தன் கணவன் இறந்த பிறகும், அவன் கள்வன் அல்லன் என்பது விளக்க நேராகச் சென்று அரசனிடம் வாதம் செய்வாளா? ஊக்கமும் உறுதியும் இருந்தமையாற்றான் குற்றத்தை நிரூபித்து, அரசன் யோசிக்காமல் விசாரணை செய்ததனால் 'நீதி தவறியவன்' என்பதை உலகிற்கு அறிவித்தாள். இது கற்பின் வெற்றிதான்.

பெண்களுக்குச் சிறந்தது கற்பு. கற்புக் காப்பது மிகவும் கடினம். எவ்வளவுதான் வீரமாக இருந்த போதிலும், சில சமயங்களில் கொடூரக் கள்வர்களால் கற்பு அழிக்கப்படக் கூடும். இதனால் பெண்களுக்கு மானம் அழிந்து விடுகிறது. வாழ்க்கைக்கே இடையூறு நேர்கின்றது. இதில் உறுதி கட்டாயம் வேண்டும்.

கற்புச் சிறந்தது எனினும், தன்னளவுக்கே பயன்படுகிறது. மற்றவர்களுக்குப் பயன் படுவதில்லை. நாம் செய்யும் ஒவ்வொரு காரியமும் மற்றவர்களுக்குப் பயன் அளிக்க வேண்டும் என்று எண்ணுகின்றவர்களுக்குக் கண்ணகியின் கற்பு மட்டும் போதும் என்று தோன்றாது. கற்புடன் கூடிய மற்ற எதாவது குணமும் வேண்டும். பொதுத் தொண்டு செய்யும் மாதின் செயல்தான் சிறந்தது.

மாதவியின் அன்பு மிகவும் பாராட்ட வேண்டியதுதான். ஏனெனில், அவள் தாழ்ந்த குலத்தில் பிறந்த போதிலும் உயர் குடியில் பிறந்த பெண்களைப் போல் வாழ்ந்தாள். அதனால், மேன்மை அடைந்தாள். உயர் குடியில் பிறந்த பெண்கள்கூட, சில நேரங்களில் முறையான வாழ்க்கை நடத்துவதில்லை. மாதவிக்குக் கணவனிடம் அன்பு அதிகம். அதனால்தான் அவளுக்கு அன்புச் செல்வி எனச் சிறப்புப் பெயர் என் தோழியால் ஏற்பட்டது. இவ் வன்பு மட்டும் இருந்தால் எல்லோருக்கும் பயன்படுமா? அன்பு இருந்தால் எல்லாக் காரியமும் நிறைவேற முடியுமா?

அப்படி நிறைவேறுமாயின் எல்லோரும் அன்பினாலேயே காரியத்தை நிறைவேற்றிக் கொள்வார்கள். பயம் படக் காரியத்தை நிறைவேற்றிக் கொள்வார்கள். கற்பும், அன்பும் நமக்கும் நம் சுற்றத்துக்கும் பயன் படும். எல்லாருக்கும் பயன்படாது. அறச் செயல் அன்பர்களுக்குப் புரிய வேண்டும் என்று எண்ணுகின்றவர்களுக்குக் கண்ணகியின் கற்பும், மாதவியின் அன்புமே போதியன ஆகா.

மணிமேகலையின் 'அறம்' மண்ணுலகமும், வானுலகமும் புகழத்தக்கது. அன்புச் செல்விக்குப் பிறந்த மகள் அன்புச் செல்வியாகத்தானே தோன்ற வேண்டும். அறச் செல்வியாக எப்படித் தோன்றினாள் என்பது யோசிக்கச் செய்கிறது. "வாழையடி வாழை" என்பது நம் முதியோர் சொல்லானமையால் சிந்திக்கச் செய்கிறது. நாம் பெற்று அனுபவிக்கும் ஒவ்வொரு செயலும் அவரவர் செய்த வினையின் பயன் ஆகும். எள் விதைத்தவன் எள்ளைத்தான் பெறுவான்; நெல்லைப் பெற முடியாது. அது போல், முன் பிறவியின் நல் வினைப் பயனால் அன்புச் செல்வியின் மகளாயினும் மணிமேகலை அறச் செல்வியாகத் தோன்றினாள்.

இவளிடம், பெண்களுக்கு இருக்க வேண்டிய நற் குணங்களும் நன்கு அமைந்திருந்தன. இவள் குணங்கள் இவளுக்கு மட்டும் பயன் தரக் கூடியன அல்ல.

ஒரு முறை எனக்கு ஆசிரியர் அறிவுப் பால் புகட்டும்போது சில எடுத்துக்காட்டுகள் கூறினார்; அவை: சூரியன் ஒளி சூரியனுக்குப் பயன் படுவதில்லை. அதன் ஒளியினால் சந்திரன் பிரகாசிக்கின்றது. வேர் ஊன்றியும் பக்கங்கள் தழைத்தும் பூவும் கனியுமாகச் செழித்தோங்கும் மரத்தின் நிழல் மரத்தைக் காப்பதற்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE
MERCHANTS

AVANASHI ROAD,
COIMBATORE.

'வானம் வேண்டா உழவு.'

உலகத்துத் தொழில்களில் உழவுத் தொழில் தலைசிறந்த தென்று முன்னர்க் கூறினேம். உழவுத் தொழிலுக்கு மழை இன்றியமையாதது. இவ்வுண்மையை "எரின் உழாஅர் உழவர் புயலென்னும் வாரி வளங் குன்றிக்கால்" என்னும் திருக்குறள் விளக்குகின்றது. மழையை வேண்டாத உழவுத் தொழிலைச் செய்பவர் நெய்தல் நில மக்கள். உப்பு விளைவிப்பது அவர் குடித்தொழில் ஆகும். அதற்கு மழை தேவையில்லை. கழிக் கரையின்கண் நேர்மையான இடத்தில் சிறு பாத்திகளைக் கோலி, அப் பாத்திகளில் கடற்கழி நீரைப் பாய்ச்சி, அந்நிலத்தார் உப்பு உற்பத்தி செய்வர். விளைந்த உப்பை உப்பு வாணிகர் கொண்டு போய்ப் பிற ஊர்களில் விற்று நெல்லைக் கொணர்வர். உமணர் தந்த நெல்லைக் குற்றி அரிசியாக்கி நெய்தல் நிலத்தவர் தாமும் உண்டு வந்த விருந்தினரையும் உண்பிப்பர். பரதவர் குடியில் தோன்றிய உலோச்சனர் தம் மரபினர் குடிச்சிறப்பைத் தாம் பாடிய மற்றோர் நற்றிணைச் செய்யுள் மூலம் நமக்கு அறிவிக்கின்றார். அச் செய்யுள் பின் வருவது:

"வண்டல் தைஇயும் வருதிரை
உதைத்துங்
குன்றோங்கு வெண்மணல்
கொடியடும்பு கொய்தும்
துனியில் நன்மொழி இனிய
கூறியுஞ்
சொல்லெதிர்ப் பெறாஅ யாகி
மெல்லச்
செலீஇய செல்லும் ஒலியிரும்
பரப்ப
உமணர் தந்த உப்புநொடை
நெல்லின்
அயினி மாவின் றருந்த நீவிக்
கணநாறு பெருந்தொடை புரளு
மார்பிற்
றுணையிலை தமியை சேக்குவை
யல்லை
நேர்கட் சிறுதடி நீரின் மாற்றி
வானற வேண்டா உழவினெங்
கானலஞ் சிறுகுடிச் சேர்த்தினை
செலினே."

'நற்றிணை' அழகு

[R. G. பிள்ளை B. A.]

தலைமகன் ஆயத்தாரொடும் கடற்கரையில் விளையாடச் சென்றாள். களவொழுக்கத்தில் ஈடுபடும் தலைமகன் அவளை நாடி அவ்விடஞ் சேர்ந்தான். சிற்றில் இழைத்தல் பெண்கள் விளையாட்டு. தலைவனும் பெண்களோடு சேர்ந்து வண்டல் மண்ணை வீடுபோற் சமைத்துக் கோலஞ் செய்தான். கரைமேல் எறிகின்ற அலைகளை எதிர்த்து விளையாடினான். வெண்மணற் குன்றுகளின் மீது படர்ந்துள்ள கொடியடும்பின் மலர்களைக் கொய்தான். இவ்வகை விளையாட்டுடன் அமையாமல் இனிய மொழிகள் சிலவற்றையுங் கூறினான். அவன் சொல்லுஞ் செயலும் தலைவியின் எதிர்மொழி (Rcsponse) யைக் கேட்கவேண்டும் என்னும் விழைவு காரணமாக எழுந்தனவாகும். தலைமகள் அவன் எதிர்பார்த்தபடி ஒன்றும் பேசவில்லை. அவள் மோன நிலையைக் கண்டு, தலைவன், தளர்ந்த உள்ளத்தனாகி, மெதுவாய் அவனூர்க்குத் திரும்புகின்றான். அந்நிலையில் தோழி அவனுடன் பேசக் கிளம்புகிறாள்; தலைமகனுக்கு ஆறுதல் கூறுகிறாள்.

'ஒலியிரும் பரப்ப!' என்றவனைத் தோழி விளிக்கின்றாள். கடலின் பேரோசையையும், கடற்கரையின் பெரிய பரப்பையும் நாம் கண்டு களித்திருக்கிறோம். ஆயினும், உலோச்சனரின் சொல்லோவியத்தோடு அக்காட்சியை அமைத்துப் பார்க்குமிடத்து, கடற்கரைக் காட்சி நம் அகக் கண்முன் நிற்கின்றதன்றோ? 'ஒலியிரும் பரப்ப!' இச்சொற்கள் பைரன் (Byron) என்னும் ஆங்கிலக் கவியின் கடற்கரைக் காட்சி வருணனையை நமக்கு ஞாபக மூட்டுகின்றன. 'கடற்கரைத் தனிமையில் ஓர் இன்பம் பொங்குகின்றது. பிறர் புகுதலில்லாத கடலோரத்தில், (கடலுடன்) கூட்டுறவும், கடல் இரைச்சலில் இன்னிசையும் எழுகின்றன' என்னும் இக் கவியின் கூற்று இன்பம் பயப்பதாகும்.

காதலன் இனிய சொற்கள் சிலவற்றைக் கூறினான். அவற்றைக் கேட்ட தலைமகள், ஆயத்திற் கஞ்சியும் ஊரார் அலர்மொழிக்கஞ்சியும் பதில் கூறவில்லை. தலைமகன் சொன்ன சொற்களின் இனிமையைத் தோழி வாயிலாக விளக்கப் புகுந்த ஆசிரியர் 'துனியில் நன்மொழி இனிய கூறியும்' என்றார். தெய்வப் புலமைத் திருவள்ளுவர், 'இனியவை கூறல்' என்ற திருக்குறள் அதிகாரத்தில், 'பயனீன்று பண்பிற் றலைப் பிரியாச் சொல்' என்றும், 'சிறுமையுள் நீங்கிய இன் சொல்' என்றும், இன் சொல்லிற்கு வரையறை தந்தார். திருக்குறள் உரையாசிரியர் பரிமேலழகர், 'பொருளால் பிறர்க்கு நன்மையைக் கொடுத்து இனிமைப் பண்பின் நீங்காத சொல்' என்றும், 'பொருளாற் பிறர்க்கு நோய் செய்யாத இனிய சொல்' என்றும் முறையே, அவ்விரு சொற்றொடர்களுக்கும் பொருளுரைத்தார். பிறர்க்கு நன்மை பயக்கும் உடன்பாட்டானும், நோய் செய்யாத எதிர்மறையானும் இனிய சொல்லை உலோச்சனர் 'துனியில் நன்மொழி இனிய' என்றமை அவர்தம் சொல் நயத்தையும், பொருள் ஆழத்தையும் புலப்படுத்துகின்றது. சுருங்கச் சொல்லின், தலைமகள் தன் மீது சீற்றங் கொள்ளாது தன் நிலையைக் கண்டு அவள் இரங்குமாறு தலைமகன் சில இனிய சொற்களைச் சொன்னான் என்பதே 'துனியில் நன்மொழி இனிய கூறியும்' என்பதன் பொருளாகும். செய்யுளினின்று அச் சொற்றொடரை வேறுபடுத்திப் பொருள் காணப் புகின், அது, மேற் சொல்லியவாறு, ஆழ்ந்தகன்ற பொருளையுந் தருவதை நாம் காண்கிறோம். தான் காதலித்த பெண் கேட்பத் தலைமகன் உரையாடலில் அவனுக்கு உள்ள பொறுப்பு மிகப் பெரிதென்பது இதனால் வெளியாகின்றது. 'ஞயம்பட உரை' என்றார் ஒளவையார். சொல் நயம் மக்கள் நாகரிகத்திற்கு அறிகுறி

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

"எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."
—புறநானூறு.

கிளை	கர, ஆவணி,	தளிர்
3	7-9-51 வெள்ளி	47

உலக மேடை

செந்தமிழ்த் தென்னாடு அருள் நெறி தோற்றிய நன்னாடு; இறைவன் உறையும் திருத்தளிகள் ஏராளமாகத் திகழும் தொன்னாடு!

அதனில், 'கோயில்' என்றே சிறப்புப் பெயர் பெற்று, சமய குரவர் நால்வர் திருப்பதிகங்களும் உடையவைகளாய் உயர்ந்து நிற்பன இரண்டு பெருந் தலங்கள். ஒன்று 'கோயில்' என்னும் சிதம்பரம்; மற்றொன்று 'காதல் செய் கோயில்' என்னும் கழுக்குன்று!

இவற்றில், 'சிதம்பரம்' ஐந்தொழில் இயக்கம் நிகழும் மூலத் தலம்; கழுக்குன்று அவ்வியக்கத்தின் விளைவுகள் நிகழும் விழாத்தலம்! அதனால், கழுக்குன்றத்தை அணுகும்போது மணிவாசகப் பெருமானுக்கு, "இனி, மேல் விளைவது அறிந்திலேன்" எனத் திருவருள் இயக்கத்தின் விளைவுகளில் எண்ணம் எழுந்தது.

ஆகவே, கோயில் என்னும் சிதம்பரத்தைவிடக் 'காதல் செய் கோயில்' என்று திருஞான சம்பந்தப் பெருமானால் அது போற்றிக்கொள்ளப் பெற்றது.

தேவார முதலிய திருமுறைகள் தில்லைப் பொன்னம்பலத்தில் அடக்கம் பெற்றிருந்தன. மணிவாசகப் பெருமானும் தில்லையில் அடக்கம் பெற்றார். ஆனால், திருக்கழுக்குன்றத்தில், அம்மறைதமிழ்கள் கடலொலி போல ஆலித்து விளங்கின; அங்ஙனமே கழுக்குன்றச் சாரலில் மணிவாசகப் பெருமானுக்கும் இறைவன் திருக்கோலம் பெருங்காட்சி தந்து விளங்கிற்று. இதனால், திருக்கழுக்குன்றம் மறையொலி ஆலுதலும் இறையொளி மிளிர்தலுமாகிய விழாத் தலமாய்த் திகழ்ந்து ஓங்குகின்றது.

விழாவுக்குரிய மலைக்காட்சி, இயற்கைக் கானல், தனிப் பாதை, சோலை சாலை நீர்நிலைகள், தங்குமிடங்கள், பரந்த பெரு வெளிகள் முதலிய நல்லமைப்புகளும் அமைந்து, அது, 'கண்ணார் கழுக்குன்றாய்த்' திகழ்ந்து வருகின்றது.

இக்காரணங்களால், தமிழகம் முழுமைக்கும், திருக்கழுக்குன்றம் விழா நிகழ்ச்சிகட்குத் தனித் தலைமையும் சிறப்பும் உடையதென்பது தெளிவாக விளங்குகின்றது. மேலும், அது தமிழ் மறைகள் ஆலும் தமிழ் வேத வெற்பாதலின், சென்னைக்கு அண்மையில் அறிவார்ந்த விழாக்களுக்கு ஏற்ற பெருந் தலமாய் மிளிர்கின்றது.

தமிழக மெங்கும் 'கார்த்திகைத் தீபம்' வைக்கப் பெற்றாலும் திருவண்ணாமலையே அதற்குத் தனிச் சிறப்பான இடமாதல் போல, தமிழக மெங்கும் திருமுறை விழா நடந்து வந்தாலும் திருக்கழுக்குன்றமே அதற்குத் தனிச் சிறப்பான உரிமை இடமாய் ஒளிர்கின்றது. அதனால் அங்கே, தெய்வத் தமிழிசைத் திருமுறை விழா, பெருவிழா வாய்த் தலைமைச் சிறப்பில் நடந்து வருகின்றது.

ஆதலால், பொதுவாகத் தமிழ் நாட்டு மக்கள் அனைவரும், சிறப்பாகத் திரு நெறியாளர் ஒவ்வொருவரும், திருமடங்கள் திருக்கோயில்கள் ஒவ்வொன்றும், தேவார ஓதுவார், தமிழிசைக் கலைஞர், திருமுறை ஆராய்ச்சியாளர், திருநெறித் தொண்டர், அருட் சான்றோர் ஒவ்வொருவரும் திருக்கழுக்குன்றம் திருமுறைப் பெருவிழாவிற் பங்கெடுத்துக் கொண்டு, தமிழகம் முழுமையும் திருக்கழுக்குன்றத்தில் ஒருங்கு திரண்டு விழாவை மேன்மேலும் பெரு விழாவாக்கி மாட்சிமை எய்துதல் கடமையா யிருக்கின்றது.

திருக்கழுக்குன்றம் தொண்ட நன்னாட்டுத் தலமாதலின், தொண்ட நாட்டுத் திருநெறியாளர்க்குப் பெருங் கடமைகள் உண்டு. தொண்ட நாட்டு யாத்திரை அண்மையில் மேற்கொள்ளப் பெறும்.

திருக்கழுக்குன்றம் திருநெறிச் சிறப்புக்கு ஓர் உலக மேடை. அதன் வாயிலாக உலகுக்கு ஒப்பற்ற பணிகள் புரிய இடமுண்டு. தமிழகம் திருவருளால் ஊக்கமுற்றுத் திரண்டெழுவதாக!

[5-ம் பக்கம் தொடர்ச்சி]

வாத்தியங்கள் முழங்க, மறு நாள் பொழுது விடிந்து கதிரவன் தோன்றினன்.

நம்பியாரூரர் திருமஞ்சன சாலை புகுந்தார். அருகிருந்தோர், மண செய் பூசி மலர்மணம் சேர்த்த நன்னீரால் நீராட்டிக் கண்ணேறு கழித்தனர்.

பெரிய புராணம்

திருத்தொண்டர் புராணத்தில், 'தடுத்தாட்கொண்ட புராணம்' என்பது, நம்பியாரூரர் வரலாற்றின் முதற் பகுதி அடங்கியது! மற்றொரு பகுதி இடையில் எயர்கோன் கலிக்காம நாயனார் புராணத்திலும், இறுதிப் பகுதி இறுதியில் வெள்ளையானைச் சருக்கத்திலும் வந்து நிறைவேறுகின்றது. ஆகவே நூலின் முதல் இடை கடை என்னும் மூன்று இடங்களிலும் நம்பியாரூரர் வரலாறு நடந்து, பெரிய புராணம் என்னும் திருத்தொண்டர் புராணத்துக்கே காப்பியத் தலைவர் அவர் என்னும் உண்மையைத் தெளிவிக்கின்றது.

இடையில் வரும் பிற நாயன்மார் வரலாறுகளெல்லாம், நம்பியாரூரர் கூறும் திருத்தொண்டத் தொகை அடியார்களின் வரலாறுகளாய், நூலின் கிளைக் கதைகளைப் போல் பொருந்தி நிற்கின்றன. இதனால், தடுத்தாட்கொண்ட புராணம் என்பது சேக்கிழார் நூலுக்குத் தொடக்கம் என்பது பெறப்படும். எனவே, அதற்கு முன் 'திருக் கூட்டச் சிறப்பு' வரையில் உள்ள பிரிவுகளே உண்மையிற் 'பாயிரம்' என்பது புலனாம்.

இங்ஙனம் அமைந்த சேக்கிழார் நூலின் முதல் எடுப்பாகிய தடுத்தாட்கொண்ட புராணம், 'கங்கை' என்னும் மங்கலச் சொல்லுடன் தொடங்குகின்றது. சேக்கிழார் கங்கை குலத்தவர் என்னும் வேளாண் செல்வராய்த் தோன்றி, சீர் நாடு என்னும் சோழ நாட்டின் முதல் அமைச்சராய் ஆட்சிபுரிந்து விளங்கியவராதலின் 'கங்கை' என்னும் மங்கலத் தண்மொழி அவர்க்கு இயல்பாகவே முதலில் எழுந்தது.

பெரிய புராணமும் சேக்கிழார் அருண் மொழியும் ஆற்றலும் மெய்ம்மையும் வாய்ந்தவை என்பதற்கு நேர்முகமான ஒரு சிறப்புக் காட்சி அண்மையில் நடந்தது. தடுத்தாட்கொண்ட புராண விரிவுரை கழுக்குன்றச் சாரலில் ஆண்டவன் திருமுன்னிலையில் இரண்டு திங்களுக்கு முன் தொடங்கப் பெற்றது. 'கங்கை' என்று முதற்சொல்லை வாக்கெடுக்கும் நேரத்தில், வான் கங்கை பெரு மழையாய் இறங்கிப் பொழிந்து உலகைக் குளிர்வித்தது. மக்கள் வியந்து உளங் குளிர்ந்து மகிழ்ந்தனர்! இக் கலி காலத்தில், தெய்வ மின்னல் வீறிய நேரமாய் அது நிகழ்ந்தது. அருண்மொழித் தேவரின் அருண்மொழிச் சிறப்பு, தன் மேன்மையை நிலை நாட்டிற்று.

திருமுனைப் பாடி நாட்டில் திருநாவலூரில் சடையனார் என்னும் ஆதி சைவ அந்தணர்க்கு அவர் கற்பின் மனைவியார் இசைஞானியார் பால், நமபியாரூரர் தோன்றினார். 'நம்பியாரூரர்' என்பது அவர்க்குப் பிள்ளைத் திருநாமம். ஆரூரர் என்பது அவர் பாட்டனார் பெயர். நம்பி என்பது இவர் சிறந்த ஆடவர் என்பது விளக்கிற்று.

மாகர்களின் நலம் ஓங்கி நிற்பது திருமுனைப்பாடி நாடு. அதனில் தவஞ் சிறந்த ஊர் திருநாவலூர். வாய்மை குன்றா மறையவர்கள் அங்கு விளங்கியிருந்தனர். ஆண்டவனுக்கு வழி வழி அடிமை செய்பவர் சடையனார்; பழுதற்ற நடக்கை யுடையவர் அவர் துணைவியார். இச் சிறந்த சூழலில், சைவ மேன்மை உலகத்தில் ஓங்கும் வண்ணம் நம்பியாரூரர் விளங்கினார்.

குழந்தையிலேயே செழுமையாய் வளர்ந்தார். தெருவில் தேருருட்டு நாளில், நரசிங்கமுனையர் என்னும் நாடுவாழ் அரசர் கண்டு அன்பு மிகுந்து, அவர் பெற்றோரிடம் சென்று அவரை வேண்டிப் பெற்று, தன் அரசிளம் புதல்வனோடு ஒப்பப் பின்னுஞ் செழுமையாய் வளர்த்து வந்தார். வைதிகத் திருவுடன் மன்னவர் திருவும் ஒருங்கிணைய நம்பியாரூரர் அருமையாய் வளர்ந்து உரிய பருவத்தில் முந்நூல் அணிந்து சிறந்த கலைகள் பயின்று மணப்பருவம் எய்தினார்.

சடையனார் தமது அரும் பெருமரபுக்கு ஏற்பப் புத்தூர் என்னும் ஊரில் திகழ்ந்த 'சடங்கவி' என்னும் ஆதிசைவ அந்தணரிடத்து, அவர் புதல்வியைத் தம் புதல்வர்க்கு மணம் பேசிச் சான்றோரை அனுப்பி வைத்தார். குலம் கோத்திரம் முதலிய நலங்களெல்லாம் ஆராய்ந்து நன்மை கண்டு சடங்கவி என்பவர் மனமொத்து இசைவு தெரிவித்தார். கேட்டு மகிழ்ந்து, சடையனார், திருமண நாள் குறித்து அரசப் பெருமைக்கு ஏற்பத் திருமண ஓலை அங்கங்கும் அனுப்பி வைத்தார்.

திருமணங் காண ஆடவரும் மகளிருமாகப் பலர் இனிய வரவேற்புடன் புத்தூரிற் குழுமினர்; மகிழ்ச்சி மீதூர்ந்து அனைவரும் திருமண முயற்சியில் ஈடுபட்டுப் பூப்பந்தரிடத்து முளைசாத்தினார்கள். பிள்ளை வீட்டாரும் நம்பியாரூரரை வாழ்த்தித் திருமண நாட்கு முன்னாள் பொன் நாண் காப்புச் சேர்த்தார். மங்கல

[தொடர்ச்சி 4-ம் பக்கம்]

நஞ்சன்கூடு பல்பொடி.

பாக்டெரியாரின்

யுனைடெட் கன்ஸர்ன்,

54, பந்தர் தெரு, :: சென்னை-1.

விரிவுரைப் பொழில்

(மயிலை ந. இராமலிங்கம்)

(பெரிய புராணச் சொற்பொழிவிற் சிந்தியவை)

1. சான்றோர் அருள் திறங்களை உணர்ந்து கொள்ள, விரிந்த உள்ளம், உயர்ந்த பண்பு, ஆழ்ந்த நோக்கு, நுண்ணிய உணர்வு வேண்டும்.

2. மாடு எளிய உணவாகிய புல்லைத் தின்று மோனமாய் வருந்தி உழைக்கின்றது; மனிதன் அவ்வாறு அதிகம் எதிர் பார்க்காதவனாய் மோனத்தோடு வீரமாய் உழைத்துப் பணி புரியும்போது, காளை என்னும் ஆண்மைப் பெயர்க்கு உரியவனாகின்றான்.

3. சான்றோரைக் காண்பது தெய்வக் காட்சி காண்பதை விடப் பல மடங்கு சிறப்பாம். இறைவன் காட்சி ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் தெரிவதற்குரியது. ஞான சம்பந்தர்க்கு ஞானப் பால் கொடுக்க வந்த அம்மையப்பர் காட்சி, கொடுத்தவுடன் மறைந்தது. ஆனால், சான்றோர் உள்ளங்களில் அமர்ந்திருக்கும் தெய்வக் கோலம் நிலைபேறாக இருப்பதாதலால் என்றும் விளங்குதற்குரியது.

4. பேதை என்பது பெண், பெண்களின் இயற்கைக் குணங்களில் ஒன்றான மடம் என்பதே அது. அறிந்தும் அறியாதவர் போல் இருத்தல் பேதை குணம். பெண்களுக்கு அது தேவையே. அவர்கட்கு அது அணிகலம்; அடக்கம் உடைய சான்றோரும் அந்நிலையில் இருக்கக் காணலாம்.

5. பெண்கள் தாம் மணம் செய்து கொள்வதற்கு முன், தமக்குக் கணவர் சான்றோராக அமைய வேண்டுமென்று தவம் செய்தல் உண்டு. மெல்லிய நினைவுகளை வலுவுள்ளனவாகச் செய்வது நோன்பு. 'நோன்' என்னுஞ் சொல், வலிமை என்னும் பொருளுடையது.

சான்றோரின் அருட் பாடல்களைப் பாராயணஞ் செய்தலும் நோன்பில் அடங்கும். புலால் மறுத்தல், தவம், கூடாவொழுக்கம், கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னா செய்யாமை, கொல்லாமை என்ற தலைப்புகளுடைய திருக்குறள் அதிகாரங்களின்படி வாழ்க்கை நடத்தினால் தவம் கைகூடும். கடமைகளைத் தவறாது செய்து வருதலும் இதற்கு முதன்மை.

6. சார்ந்தோர்க்கு ஆதரவு காட்டி அருள் செய்வது ஆண்தன்மை.

7. தம்மைவிடச் சிறந்தாரைக் காணும் பொழுது அவர்கள் அருள் தன்மையை வாங்குதலும், அல்லாதாரைப் பார்க்கும் பொழுது தம் அருளியல்பைப் பொழிதலும் நல்லோர் இயல்பு.

8. அருளாசிரியர்களை வணங்கும் பொழுது அவர்கள் அருள் என்னும் வெள்ளம் அலைபோல் பாய்ந்து நம் உள்ளத்தை இயக்குகின்றது என்று பாவித்தல் வேண்டும்.

9. சான்றோர்க்கு வடிவம் அவர் அருள் நலமே; பொருள் நலம் அதில் சிறிது விளங்கும். இங்ஙனம், அருளே உருவாய் இருப்பதல்லது பொருள் உருவாய் அவர் இரார்.

10. ஆண்மைப் பண்பும் பெண்மைப் பண்பும் சேர்ந்து ஓர் உயிர்ப் பண்பாகி உள்ளுணர்வாகிய தெய்வப் பண்பை மலர வைத்தல் சைவப் பண்பு.

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

யாகும். பண்டைத் தமிழரின் நாகரிக மேம்பாடும் அவர்தம் இனிய சொற்களால் தெளிவாகின்றது.

சொல்லெதிர்ப் பெறாமல் வாட்டமுற்றுத் திரும்புகின்ற தலைமகனுக்குத் தோழி, தலைமகளை வரைந்து கோடலின் சிறப்பைக் கூற முகத்தான் களவொழுக்கத்தின் இழுக்கை அறிவுறுத்துகின்றாள். "நீ மணமாலை சூடி எஞ் சிறு குடியிற் சேர்வாயானால், உனக்கு மாத்திரமேயன்றி உன் குதிரைக்கு மன்றோ விருந்து நடக்கும். அரிசிச் சோற்றை நீ உண்ணலாம். அரிசி நொய், தவிடு, கழுநீர், வடிநீர் முதலியன உன் குதிரைக்கு ஆகாரமாகும். பிறர்க்கஞ்சாமல் நீ தலைவியுடன் கூடி உறங்கலாம்" என்கிறாள் தோழி. உண்பண்டத்திற்கு அயினி என்று பெயர். நெல்லைக் குற்றி அரிசியாக்குவதன் மூலமும், அவ்வரிசியைச் சமைப்பதன் மூலமும் பெற்ற உண்பண்டங்களை 'நெல்லின் அயினி' என்ற இரு சொற்களாலும், உப்பை விற்றுப் பெற்ற நெல்லை 'உப்புநொடை நெல்' என்றும் ஆசிரியர் குறித்தமை வியத்தற்குரியது. தலைமகன் அருந்த நெல்லயினி உண்டு என்னாது 'நெல்லின் அயினி மாவின் றருந்த' என்றமையான், தான் உண்பதை விடத் தலைமகன், தன்னைச் சுமந்து வந்த குதிரையை உண்பிப்பதில் கருத்துடையவன் என்பதை ஆசிரியர் காட்டினார்.

'அழியா மரபின் நம் மூதூர் நன்றே' என்று மற்றோர் நற்றிணைச் செய்யுளில் நெய்தல் நிலத்தூர்ப் பெருமை கூறிய உலோச்சனார் மேற் செய்யுளில் 'வானம் வேண்டா உழவின் எங் கானலஞ் சிறுகுடி' என்று நெய்தல் நிலக்குடிப் பெருமையைப் பேசுகிறார். இதனால் ஆசிரியரின் ஊர்ப்பற்றும், குடிப்பற்றும் வெளியாகின்றன.

உண்பண்டத்தை 'அயினி' என்றும், விற்றலை 'நொடை' என்றும், உப்புப் பாத்தியைச் 'சிறுதடி' என்றும் பழஞ்சொற்களால் குறித்தமையான், ஆசிரியர் சொல்வளம் நிரம்பப் பெற்றவரெனத் தெரிகிறது.

இவ்வாறே, இவ்வாசிரியரைப் பற்றிய பல குறிப்புகளை அவர் பாடிய செய்யுள்களினின்று திரட்டியெடுக்கக் கூடும். வாழ்க்கை வரலாறு ஒன்றுமில்லாத சங்கப் புலவர்களைப் பற்றி அவர் இயற்றிய செய்யுள்களில் காணப்படும் குறிப்புகளைத் திரட்டி அப் புலவர்களைத் தற்காலத் தமிழர்க்கு அறிமுகப்படுத்தல் அறிஞர்தம் கடனாகும். இதுவரை திரட்டப்பட்ட புலவர்தம் வரலாற்றுக் குறிப்புகள் சங்க நூல்களிற் பரந்து கிடக்கும் குறிப்புகளின் ஒரு சிறு பகுதியேயாகும். காலமும் வசதியும் நேருமாயின், இத்தகைய ஆராய்ச்சிக்கேற்ற நுண்ணறிவு படைத்தோர் பலர் பணி செய முற்படுவர். அன்னாரை ஊக்குதல் தமிழார்வங் கொண்ட பெரியார்களின் கடனாகும்.

நடையின் நற் பயன்

(உரு. தெய்வ. அறுமுகனார்.)

உலகின்கண் தோன்றிய மக்கள் உடலை ஓம்பி வாழ முயல்கின்றனர். எனினும் ஆகார நியமமும், மருந்து நியமமும் பிறவும் கொள்கின்றனர். உணவும் விதிப்படி வயிற்றிற்கு அரைப்பாகம் ஆகாரம், கால்பாகம் நீர், கால்பாகம் காற்றுமாகக் கொள்கின்றனர், "மிகினும் குறையினும் நோய் செயும்" எனு முறையான் உணவு ஒருவாறு கிடைத்ததனை விதிப்படி கொள்கின்றனர். ஆனால் நடையென்பதை யாவரும் வெறுக்கின்றனர். ஏன்? நடையின் குணம் அறியாமையா லென்பது வெளிப்படை. நமது மூதாட்டியார் "சித்திரமும் கைப்பழக்கம்......நித்தம் நடையும் நடைப்பழக்கம்" என ஆண்டமை ஒருவாறு உன்னிக் கருதற்பாலது.

நடையினால் நரம்பு, தசை இவைகள் தட்டுப்படும் (பலப்படும்); உடலிற்குத் திடமுண்டாகும். நடை, உணவு, சரம், பிராணாயாமம் (காற்றை நடத்தல்) இவைகளைத் தினமும் வாழ்க்கையிற் கொண்டு நடத்தினால் உடலிற்கு நோயின்றி ஆயுள் பெருக்கம் எற்படும். நெடு நாள் வாழலாம். இவையே சுக வாழ்வாகும். நரம்புத் தளர்ச்சி யேற்படின் சகல இன்பத்தோடு போகம் முதலியன கெடும். "யோகத்திற்கும் போகத்திற்கும் தேகம் வேண்டும்"; நரம்பும் தசையும் தளர்ந்தால் மூப்புண்டாகும். இவைகள் பலமடைய வேண்டுமானால், கட்டாயம் நடை வேண்டும்.

சிலர் அதிக நடை கூடாதென்று கூறுகின்றனரே யொழிய நடையளவு குறிக்க வில்லை. வலியற்ற மக்கள் சதா வண்டி வாழ்க்கை நன்மை யென்றும், நடை மதியின்மை யென்றும் கூறுவர்.

நடையின் அளவினைக் கவனிப்போம். நகரத்தில் (சென்னையில்) வாழும் மக்கள், ஒரு நாளைக்கு ஒரு மைல் தூரம் நடப்பது மில்லை. தங்க சாலை மிமோரியல் லைபரொரியில் (Memorial Library) இருந்து கந்த கோட்டம் ஏகவும் மனிதன் இழுக்கும் வண்டி ("Ricshaw"); சென்ட்ரலி லிருந்து கார்ப்போரேஷன் (Central to Corporation) போகவும் டிராம் (Tram) இருக்கிறது. பிற இடங்கட்கும் எலக்டிரிக் ட்ரெயின் (Electric train) பஸ் (Bus) முதலிய வண்டிகள்; தனவந்தர்கள் சதா உறங்குவதும், வண்டியில் செல்வதுமாக வாழ்கின்றனர். இவர்கட்குச் சராசரி ஒரு நாளுக்கு ஒரு மைல் கூட நடப்பது மிகையாகும். உண்டபின் குறுநடையும் குதிரைக் கொம்பாகும். நடக்காத மக்கட்கு உடல் தளர்ச்சி, கண்களில் தூர் நீர் தங்கல், உடலிற் பல இடங்களில் வாத நீர், குத்தல், மேகநீர் பரவல் முதலிய பல ரோகங்களும் நரம்புத் தளர்ச்சியு முண்டாய் அதனால் மதன மஞ்சரி மாத்திரை, சிட்டுக்குருவி லேகியம் போன்ற மருந்து சாப்பிடவும் நோயுண்டாவதற்குக் காரணமுமாகின்றன.

யோகிகளும், பலவித சாதனையாலும் குறுநடையாலும் உடலை ஓம்புகின்றனர். சமீபத்திலிருந்த "கலியுக பீமன் எனும் பெயர் பூண்ட" இராமமூர்த்தி நாயுடு போன்றவர்களும் என்ன செய்தனர்? இவர்களெல்லாம் நடையோடு மேற் கூறிய பிராணாயாமம் போன்ற, சாதனைகளையே கைக்கொண்டனர். (இவை இராமமூர்த்தி நேரில் சொல்லியவை)

இனி நாட்டுப்புற மக்களை ஆராய்வோம். ஒரு உழவன் அதி காலையிலெழுந்து ஐந்து மணிக்கு உழவு உழ ஆரம்பித்து, காலை எட்டு மணிக்கு உழவை நிறுத்துகின்றான். பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பித்து மாலை 6 மணிக்கு நிறுத்துகின்றான். ஆக ஒரு நாளைக்கு 6 மணி நேரம் உழுகின்றான். உழவன் சதா உழவு மாட்டின் பின்னே நடக்கின்றான். மணி யொன்றிற்குக் குறைந்தது இரண்டு மைல் நடப்பதாக எண்ணினாலும் நாள் ஒன்றுக்கு 6 மணி நேரம் நடப்பதானால் 12 மைல் நடப்பதாக ஏற்படுகிறது. இவர்கள் 90,100 வயது வாழ்கின்றனர். மருத்துவரைக் கண்டதே யில்லை. மேற்குறித்த நகர வாசிகள் சதா மருத்துவரிடம் சென்று சுக வாழ்வில்லாமலும் 40-50 வயதி லிறக்கின்றனர். இப்போது ஆராய்ச்சியின் படி சராசரி வயது 25 என்கின்றனர். இதற்குக் காரணம் நடையின்மையும் உடலிற்கு வேலை யில்லாமையுமேயாம்.

நடப்பதினால் சில நேரங்களில் உடலினுள்ளிருந்து தூர் நீர் (வியர்வை) சர்மத்தின் (தோலின்) வழியே வெளிக் கழிகின்றது. அதனால் நச்சு நீர் கழிந்து உடல் ஆரோக்கியமாக இருக்கும். நடக்காதவர்கள் உடற் பயிற்சியாவது பழக வேண்டும். அதற்கும் சோம்பலானால் 'சோம்பித் திரிபவன்—தேம்பி யழுவான்" எனும் முது மொழிக்கிணங்க உலகத்தையும் அழகிய மக்களையும் பார்த்து அழவேண்டும்.

அனுபவத்தில், சென்னையில் வதிந்த காலை 3 மைல் நடக்காதவன் 10 மைல் நடக்கின்றான். எப்போதும் சிறிது நடந்தவர்கள் முற் காலத்திலும் இப்போதும் 80 வயதிற்குக் குறைந்ததேயில்லை. ஆதலான் ஒவ்வொரு மகனும் உத்தியோகத்திற்குப் போகும போதேனும் மற்று எந்தச் சமயத்திலேனும் உடல் திண்மைக்குத் தக்கவாறு 2-மைலாவது கட்டாயம் நடந்து பழக வேண்டும். இன்றேல் மக்கள் உடலமைப்பிற்கே இடையூறாகுமென்க. எடுத்துக்காட்டாக, காந்தியடிகள் "யங் இந்தியாவில்" தம் வாழ் நாளில் மிகுதியும் நடந்ததாயும், நடக்கப் பிரியமென்றும், நடப்பது வழக்கமென்றும் குறிப்பிடுகிறார்கள். அடிகளும் 70 வயதிற்கு மேற்பட்டிருந்தது யாவரும் அறிந்தது ஒன்றாம். அடிகளே 120 வயதிருப்பேனென்று சொல்லி வந்தார்கள். இவையன்றி இன்னும் பல சான்றுகள் உண்டென்க.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

கன்று; மற்ற உயிர்கள் நிழல் பெற்று வருகின்றன.

அப்படியே மணிமேகலையும் தனக்காக வாழவில்லை, மற்றவர்கள் நலத்திற்காக "அமுத சுரபி"யைப் பெற்றாள்.

தங்களுக்கு இடுக்கண் செய்கின்றவர்களை அடியோடு வெறுப்பது உலக இயல்பு. ஆனால் மணிமேகலை அப்படிச் செய்யவில்லை. "உதய குமரன்" மணிமேகலையை விரும்பிச் சென்றபோது ஒரு விஞ்சையனால் வெட்டுண்டு இறந்தான். அக் குற்றச்சாட்டினால் மணிமேகலை சிறைச்சாலையில் இருக்க நேர்ந்தது. அப்போது இராசமாதேவி குற்றமற்றவளாகிய மணிமேகலையை வஞ்சகத்தால் துன்புறுத்தினாள். ஆனால் அதை அவள் பொருட் படுத்தாமல் மெய்யறிவு உண்மைகளை அவளுக்கு எடுத்துக் கூறி அறிவு புகட்டினாள். இதனால் மணிமேகலையின் பெருந்தன்மையும் பொறுமையும் விளங்குகின்றன.

மேலும், விவாகம் இல்லாமலே வீரக் கற்புச் செல்வியாக வாழ்ந்தாள். கணவனிடம் மட்டும் அதிக அன்பு வைத்து வாழ்ந்த மாதவியைப் போலன்றி, எல்லாரிடமும் உள்ளன்புடன் உறவாடினாள். இவள் பெற்ற "அமுத சுரபி" என்றும் வற்றாத தன்மையை உடையது. இதைப்போலவே இவளுடைய நற்குணமும், அறச்செயலும், புகழும் என்றும் வற்றாது நீடித்து நிலை நிற்கின்றன.

இவள் செய்த அன்னதானம் மிகச் சிறந்தது. யானைத்தீ என்னும் கொடிய நோயினால் வருந்தும் பிணியைப் போக்கினாள். பசியால் வருந்தினவர்களுக்கு இல்லை என்னாமல் பசி தீர்த்தாள். வள்ளன்மைப் புகழ் பெற்றாள். இவ்வாண்டு திருக்கழுக்குன்றத்தில் திருக்கூட்டம் கூடிய போது, வண்ணை வள்ளியம்மையார் அவர்கள், வந்த அடியார்களுக் கெல்லாம் இல்லையென்னாமல் முகமலர்ச்சியோடு எப்படி உணவு அளித்தார்களோ அங்ஙனமே மணிமேகலையும் தன் காலத்தில் உள்ளவர்கள் நோயை எல்லாம் தீர்த்தாள்.

தற்காலம், உணவு நெருக்கடியால் நமக்கு அரை வயிற்றுக்குக் கூட அரிசி கிடைக்காத காலம். சமமாகப் பகுக்கும் முறை இருந்தும், சமம் செய்யக் கூட வில்லை. சமமாகப் பகுத்துண்ணும் முறையில்லாத அக்காலத்தில் மணிமேகலை சமநிலையில் உணவு படைத்தாள். பசியாறும்படி உணவு தருவது உண்மைச் சமநிலை. மணிமேகலையின் அறம் இன்னும் உயர்ந்ததாயிற்று. அவள் வாழ்க்கையும் சிறந்ததாயிற்று.

நற்குண நங்கையும் தல மங்கையுமாய் இருந்தமையினால் இவளுக்கு என்ன இடையூறு வந்த போதும், இயற்கையே, தடுத்துக் காப்பாற்றியது. கற்போடும் அன்போடும் கூடிய அறச் செயல் இடுக்கண் நீக்கி இன்பம் உண்டாக்கிற்று. பொது மக்களின் பசியைத் தீர்ப்பதே தனக்கு இன்ப வாழ்க்கையாக நினைத்து வாழ்ந்தாள். அதனால் சிறப்படைந்தாள்.

இக்காலத்தில் இருக்கும் பெண்களுக்கும் பொதுத் தொண்டு செய்ய வேண்டும் என்ற உறுதியான எண்ணம் இருக்கவேண்டும். இவ்வெண்ணம் இருக்குமாயின், ஊழ்வினையாயினும், சுற்றத்தின் சூழ்ச்சியாலும் இயற்கை என்னும் தெய்வமே தடுத்து விலக்கும்.

நமக்கு வாழ்க்கை என்பது பொதுத் தொண்டுதான். பணியே வாழ்வு. எதற்காகச் செல்வம் திரட்டுகின்றோம். செல்வத்தை முதலாக வைத்து, ஏழை எளியவர் உயர்வுக்கு உழைப்பதற்கு என்று ஒவ்வொருவருக்கும் எண்ணம் இருக்க வேண்டும். சிலப்பதிகாரச் செல்வியர்களின் மனப் பண்புகளில் எனக்கு மிகவும் விருப்பமானது மணிமேகலையின் அறச் செயல்தான். நாம் வாழ்ந்தாலும் மணிமேகலையைப் போல் வாழ வேண்டும். அவள் பெற்ற அமுத சுரபியைப்போல் அறவுள்ளத்தைப் போல் இக்காலத்தில் பெற்றிருப்பின் இப் பஞ்சம் உடனே நீங்கி விடும்.

செல்வப்பற்றுள்ளவர் அமுத சுரபியைப் பெற்றாலும் ஊதியம் பெறத்தான் விரும்புவார்கள்; அறச்செயல் செய்ய விரும்ப மாட்டார்கள். ஆகலால் அருள்பெற்று உள்ளவர்களுக்கே அது சிறக்கும். தங்கத்தை வெட்டி எடுக்கும்போது பிரகாசமின்றி மறைந்திருந்து சுத்தம் செய்த பிறகு பிரகாசிக்கின்றது போல், அருள் பற்று இருந்தாலும் அறச் செயல் புரியும் போதுதான் அது ஒளி விட்டு மிளிர்கின்றது.

என்னைக் கேள்வி கேட்டு எழுதின தோழிக்கு யார் செயல் விருப்பமாக இருக்கின்றதோ தெரியாது; ஆனால் எனக்கு மட்டும் மணிமேகலையின் செயல்தான் விருப்பமாக இருக்கின்றது. மணிமேகலையைப் போல் விளங்க இறைவன் துணையும் ஆசிரியர் அருளும் என்றைக்கும் என்னை விட்டு நீங்காமல் நிலை நிற்கும் படி வேண்டுகின்றேன்.

PHONE 55034 TEL. ENKAYAM

கைத்தறி ஆடைகளில் சிறந்தது எங்கள் கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்குதெரு சென்னை 1.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம், மதுராந்தகம் (அஞ்.)